# திருத்துறைப்பூண்டி நகராட்சி

## அவசரக் கூட்ட அறிக்கை

திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 15–10–2018 திங்கட் கிழமை மாலை 3.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்படும் அவசரக் கூட்ட அறிக்கை.

இடம்: திருத்துறைப்பூண்டி
நாள்: 15–10–2018

தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

### பொருள் எண் 1:

அரசாணை (நிலை) எண் 73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.07.2018 மற்றும் அரசாணை (நிலை) எண் 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 26.07.2018ன்படி 2018 ஏப்ரல் மாதம் 1ம் நாள் முதல் சொத்து வரி சீராய்வு செய்ய ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

01.04.2018ல் சொத்து வரி சீராய்வு செய்ய 07.09.2018–ந்தேதிய நகர்மன்றத் தீர்மானம் எண் 382–ன்படி நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளையும் மூன்று மண்டலங்களாக ஏ, பி, சி என பிரிவு செய்து கலம் 2–ல்கண்டவாறு கீழ்க்கண்டவாறு ஒரு சதுர அடிக்கு மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டதற்கு மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

| மண்டலம் | ஆட்சேபனைக்கு முன்பு 01.04.2018ல் சதுர அடிக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ.பை. | ஆட்சேபனைக்கு பின்பு தற்பொழுது 01.04.2018ல் சதுர அடிக்கு நிர்ணயம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள தொகை ரூ.பை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| ஏ | 1.80 | 1.60 |
| பி | 1.20 | 1.00 |
| சி | 0.70 | 0.70 |

மேற்கண்ட சொத்து வரி சீராய்வு குறித்து 11.09.2018ம் தேதி தினத்தந்தி நாளிதழில் கலம் 2–ல் கண்டவாறு அறிவிப்பு வெளியிட்டு பொதுமக்களிடம் ஆட்சேபனை கோரப்பட்டது. அதனை தொடர்ந்து பொதுமக்களிடமிருந்து ஆட்சேபனைகள் பெறப்பட்டுள்ளது. இந்நிலையில்

மேற்படி ஆட்சேபனைகள் குறித்து பரிசீலனை செய்து கலம் 3–ல் கண்டவாறு ஒரு சதுர அடிக்கு தொகை மறு நிர்ணயம் செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

திருத்துறைப்பூண்டி சேம்பர் ஆப் காமர்ஸ் மற்றும் ஜவுளி வியாபாரிகள் சங்கம் தற்போதைய மதிப்பு சதுர அடிக்கு மண்டலம் ஏ – 1.05பைசா என்பதை 1.40 பைசாவாகவும், மண்டலம்–பி – 0.55 பைசா என்பதை 0.90 பைசாவாகவும், மண்டலம்–சி – 0.30 பைசா என்பதை 0.60 பைசாவாகவும் மேலும் திருததுறைப்பூண்டி நகை வியாபாரிகள் சங்கம் மண்டலம் ஏ – 1.05பைசா என்பதை 1.35 பைசாவாகவும், மண்டலம்–பி – 0.55 பைசா என்பதை 0.80 பைசாவாகவும், மண்டலம்–சி – 0.30 பைசா என்பதை 0.50 பைசாவாக மாற்றம் செய்யவும் அதனை தொடர்ந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்கிஸ்ட்) மற்றும் திராவிட முன்னேற்ற கழகம் திருத்துறைப்பூண்டி ஆகியோரிடமிருந்து சொத்து வரி சீராய்வு 70% சதவீதத்திலிருந்து 130% சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது எனவும், சந்தைப்பேட்டை தெரு, ரயிலடி தெரு ஆகிய தெருக்களை ஏ மண்டலத்திலிருந்து சி மண்டலமாக மாற்றம் செய்ய கோரியும், சொத்து வரி உயர்வை திரும்ப பெறவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்கள். மேற்படி மனுதாரர்களின் மனுக்கள் பரிசீலனைசெய்து தற்போது நகராட்சி சொத்துவரி மூலம் வருமானம் 2017–2018 ஆம் நிதி ஆண்டின்படி 95.77 இலட்சமும் அதே ஆண்டு அடிப்படை வசதி மற்றும் பணியாளர்களின் ஊதிய செலவீனம் ரூ.418.00இலட்சமாக உள்ளது. எனவே, நகராட்சியின் நிதி நிலைமையினை கருத்தில் கொண்டு வணிக நிறுவனங்களின் கோரிக்கையினை ஏற்று கலம் 3ல் கண்டுள்ளவாறு சதுரஅடிக்கு தொகையினை மறுநிர்ணயம் செய்யவும் மேலும் கடந்த 2017–18ம் நிதியாண்டில் சொத்து வரி மறு அளவீடுகள் பணியின்போது 3963 சொத்து வரி இனங்களுக்கு 30 சதவீதம் உயர்த்தப்பட்ட காரணத்தினாலும், மற்ற நகராட்சிகளில் 2018–19 சொத்து வரி சீராய்வில் சதுர அடி மதிப்பு நிர்ணயம் தொகை 40 சதவீதம் உயர்த்தி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதால் தற்போது கலம் 3–ல் கண்டவாறு சதுர அடிக்கு 50 சதவீதம் உயர்வு செய்யப்படுவதாலும், மண்டலம் – ஏ – 1.80 பைசா என்பதை 1.60 பைசாவாகவும், மண்டலம்–பி – 1.20 பைசா என்பதை ரூ.1/– எனவும், மண்டலம்–சி – 0.70 பைசாவை எவ்வித மாற்றமும் இல்லாமல் 0.70 பைசாவாகவும் நிர்ணயம் செய்ய மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

ந.க.எண்.2547/2018/அ1

தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

# திருத்துறைப்பூண்டி நகராட்சி

## இயல்பு கூட்ட அறிக்கை

திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 31–10–2018 புதன் கிழமை மாலை 3.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்படும் இயல்பு கூட்ட அறிக்கை.

இடம்: திருத்துறைப்பூண்டி
நாள்: 29–10–2018

தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

### பொருள் எண் 1 :

இந்நகராட்சி கொசு ஒழிப்பு பணிக்கு தேவையான கொசுஒழிப்பு மருந்து ரெமிக்ஸர், செப்டிக்டேங் காற்று போக்கு குழாய் மூடும் கொசு வலைகள், E.M. சொலிஸன் ஆகியன சப்ளை செய்தல் பணிக்கு 24.09.2018 திங்கட் கிழமை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| வ.எ. | நிறுவனத்தின் பெயர் | விநியோக அளவு | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ அம்மன் டிரேடர்ஸ், 1/102. சேலம் மெயின்ரோடு, செல்லப்பன் பட்டி, நாமக்கல்–1. | கொசுவலை பை ஒன்று | 25/– |
| | | ரெமிக்ஸர் லிட்டர் | 650/– |
| | | E.M. சொலிஸன் | 950/– |
| 2. | ஸ்ரீ பிளாஸ்டோடெக், 31/1.6வது பிரதான சாலை, திருமுடிவாக்கம்,சென்னை–44 | கொசுவலை பை ஒன்று | 27/– |
| | | ரெமிக்ஸர் லிட்டர் | 670/– |
| | | E.M. சொலிஸன் | 995/– |

அலுவலக குறிப்பு:

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள வரிசை எண் 1–ல் உள்ள ஸ்ரீ அம்மன் டிரேடர்ஸ், நாமக்கல்–1 நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். தனி அலுவலர் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.2944/2018/எச்1)

### பொருள் எண் 2:

இந்நகராட்சியின் 2017–18ம் ஆண்டில் நடைபெற்ற திட்டப்பணிகள் குறித்த விளம்பரம் தினகரன் நாளிதழில் வெளியிட பரிந்துரைத்து வரப்பெற்ற மாவட்ட ஆட்சியர், திருவாரூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.135/செ.ம.தொ.து/2018 நாள் 2.9.2018–ன்படி 2017–18ல் நடைபெற்ற திட்டப்பணியின் விவரம் திருச்சி, தினகரன் தொழில் மலர் 2018–ல் வெளியிடப்படுவதற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதையும், மேற்படி விளம்பரம் செய்தமைக்கு வரப்பெறும் விளம்பர கட்டண தொகையினை பொதுநிதியிலிருந்து வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதியளிக்கலாம்.

(ந.க.எண்.3151/2018/இ1)

## பொருள் எண் 3 :

இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் த.நா.50ஆர்–1074 பொலிரோ வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை திருச்சி, மஹிந்திரா டீலர், சிவா ஆட்டோ மொபைல்ஸ் மூலம் சீர் செய்து கொள்வதற்கும், மேற்படி செலவின பட்டியல் தொகையினை பொது நிதியிலிருந்து வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதியளிக்கலாம்.
2. மேற்படி ஈப்பு வாகன பயன்பாட்டினை கருத்தில் கொண்டு ஈப்பு வாகன பழுதுகளை மெஸ்ஸர்ஸ். சிவா ஆட்டோ மொபைல்ஸ் நிறுவனம் மூலம் சீர் செய்தமைக்கான வரப்பெற்றுள்ள பட்டியல் தொகை ரூ.18550/–ஐ வழங்கிட மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளதை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.383/2011/இ1)

## பொருள் எண் 4 :

இந்நகராட்சியின் பயன்பாட்டிலுள்ள த.நா.50ஆர்–1074 பொலிரோ வாகனத்தின் வாகன காப்பீடு 03.09.2018ம் தேதியுடன் முடிவடைய இருப்பதால் வாகன காப்பீட்டை ஓராண்டிற்கு புதுப்பித்து கொள்ளவும், இதற்கான வாகன காப்பீட்டு தொகை ரூ.16840/–ஐ த ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி லிட்.,க்கு பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதியளிக்கலாம்.
2. ஈப்பு வாகன காப்பீட்னை அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று வாகன காப்பீடு தொகை செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.383/2011/இ1)

## பொருள் எண் 5 :

இந்நகராட்சிக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017–18–ன்கீழ் திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் திரு.ப.ஆடலரசன் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்ட பணியினை காமராஜர் சிலை முதல் பொய் சொல்லாபிள்ளையார் கோயில் வரை பேருந்து நிலைய அணுகு சாலையினை ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.1817/2017/அ5 நாள் 21.09.2018ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பதிவிற்கும் மேற்படி திட்டப்பணிகளை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலக குறிப்பு:** அனுமதியளிக்கலாம்.

(ந.க.338/2018/இ1)

## பொருள் எண் 6 :

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதத்தின்படி இந்நகராட்சியில் EOI 2018–19–ன்கீழ் செய்யப்பட உள்ள சமுதாய தானியங்கி குடிநீர் இயந்திரம் நிறுவி வார்டு எண் 1–ல் பராமரிக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை (இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.3285/2018/இ1 நாள் 27.09.2018ம் தேதிய கடிதத்தின்படி) மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும், ஒரு தமிழ் நாளிதழில் தமிழ்நாடு அளவிலும் மற்றும் ஆங்கில நாளிதழில் தென்னிந்திய அளவிலும் விளம்பரம் செய்திட சென்னை செய்தி மக்கள் தொடர்பு துறை இயக்குனர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதில், மேற்படி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகளை சென்னை Accord Advertising Agencies மூலம் விளம்பரம் செய்தமைக்கு Bill No.DIPR/AAA/0690/ 18-19 நாள் 01.10.2018ன்படி கூடுதல் பட்டியல் தொகை ரூ.59745/–ஐ வழங்கிட கடிதம் வரப்பெற்றுள்ளதால், மேற்படி விளம்பர கட்டண தொகையினை பொது நிதியிலிருந்து வழங்கிட கடிதம் வரப்பெற்றுள்ளதால், மேற்படி விளம்பர கட்டண தொகையினை பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலக குறிப்பு:** அனுமதியளிக்கலாம்.

(ந.க.3285/2018/இ1)

## பொருள் எண் 7 :

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதத்தின்படி இந்நகராட்சியில் EOI 2018–19–ன்கீழ் செய்யப்பட உள்ள சமுதாய தானியங்கி குடிநீர் இயந்திரம் நிறுவி வார்டு எண் 1 முதல் 24 வரை (வார்டு எண் 1 நீங்கலாக) பராமரிக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை (இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.3285/2018/இ1 நாள் 03.10.2018ம் தேதிய கடிதத்தின்படி) மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும், ஒரு தமிழ் நாளிதழ் தமிழ்நாடு அளவிலும் மற்றும் ஆங்கில நாளிதழில் தென்னிந்திய அளவிலும் விளம்பரம் செய்திட சென்னை செய்தி மக்கள் தொடர்பு துறை இயக்குனர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதில், மேற்படி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகளை சென்னை Accord Advertising Agencies மூலமாக விளம்பரம் செய்தமைக்கு Bill No.DIPR/AAA/0690/ 18-19 நாள் 08.10.2018ன்படி கூடுதல் பட்டியல் தொகை ரூ.68145/–ஐ வழங்கிட கடிதம் வரப்பெற்றுள்ளதால், மேற்படி விளம்பர கட்டண தொகையினை பொது நிதியிலிருந்து வழங்கிட கடிதம் வரப்பெற்றுள்ளதால், மேற்படி விளம்பர கட்டண தொகையினை பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலக குறிப்பு:** அனுமதியளிக்கலாம்.

(ந.க.3285/2018/இ1)

தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.